**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/

*Article Type: Original Research Article*

# An Overview of the Traditional Status of Paththuppattu Literature

**Dr. G. VIJAYARAGAVAN***

Head – Assistant Professor in Tamil, SONA College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India.
Affliated to Periyar University, Salem, Tamil Nadu, India.
ORCiD : https://orcid.org/0009-0002-9262-2204

* Correspondence: sonaragavan@gmail.com,,

**Received**: 22-12-2025; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** The Pattuppāṭṭu (Ten Idylls) and Eṭṭuttokai (Eight Anthologies) stand as the earliest examples of Tamil literature, serving as an enduring bridge that allows the 21st-century generation to comprehend the lifestyle of ancient Tamils. These distinct literary forms constitute the corpus of Sangam literature, which is classified into two main divisions and conceptually centered around the themes of Akam (interior/love) and Puram (exterior/war and public life). While Sangam literature is currently being read and interpreted through various approaches, Pattuppāṭṭu specifically is understood through the lens of Akam and Puram, the unique Āṟṟuppaṭai (guide) genre, and chronological research. Although many scholars have previously analyzed Pattuppāṭṭu from a traditional standpoint, continued re-examination is necessary to align with chronological methodologies and the evolving context of human life. Therefore, this study is significant as it undertakes a re-analysis of Pattuppāṭṭu literature from a traditional perspective.

**Keywords:** Pattuppattu, Sangam Literature, Akam and Puram, Aatruppadai, Traditional Perspective, Ancient Tamils, Literary Re-examination,

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பத்துப்பாட்டு இலக்கியம் மரபுசார் நிலையில் ஓர் மீள்பார்வை

***முனைவர் க.விஜயராகவன்,**

தலைவர் - தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5, தமிழ்நாடு, இந்தியா. பெரியார் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்றது, சேலம், தமிழ்நாடு, இந்தியா.

பாட்டும் தொகையும் காலத்தால் முந்தியது. பழந்தமிழர் வாழ்வியலை அடுத்தடுத்தத் தலைமுறை என இந்த 21-ஆம் நூற்றாண்டினரும் அறிந்துகொள்ளும் வகையில் சிறந்து விளங்குவது. இப்படி தனித்த சிறப்புமிக்க இலக்கிய வடிவம் கொண்டவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருபிரிவுகளில் அணுகிட முடிகிறது. அதேபோல இந்த இலக்கியங்களின் கருத்து நிலைப்பாடு அகம், புறம் என்பதை மையப்படுத்திக் கொண்டு விளங்குகிறது. சங்க இலக்கிய வாசிப்பு பலநிலைகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் பத்துப்பாட்டு இலக்கியத்தை அகம், புறம் என்ற பொருண்மை அடிப்படையிலும் ஆற்றுப்படை என்ற புதியதொரு இலக்கிய வகைமையிலும் கால ஆராய்ச்சி நிலையிலும் அறிய முடிகிறது. பத்துப்பாட்டைப் மரபுசார் நிலையில் பலர் ஆராய்ந்துள்ளனர். எனினும் காலநிரல் முறைகளுக்கும் மனித இனத்தின் வாழ்வியலுக்கும் தகுந்த வகையில் மீள்நிலை ஆய்வுகள் அவசியமாகிறது. எனவே, பத்துப்பாட்டு இலக்கியத்தை மரபுசார் நிலையில் ஆய்வதாக இந்த ஆய்வு அமைவது குறிப்பிடத்தக்கது.

பத்துப்பாட்டு நூல்களின் முறைவைப்புப் பின்வருமாறு காணப்படுகிறது. இதனைத் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ளது பின்வரும் பழம்பாடல்.

**“முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து”**

இவற்றை இதே வரிசை முறையில் வழங்குவது மரபாகிப் போனது..

**“பத்துப் பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே”**

என்று இத்தொகுதியின் பெருமையைப் பேசுகிறது மனோன்மணீயம். பத்துப்பாட்டு, தொகை நூலாகக் காட்சியளித்தாலும், ஒவ்வொரு பாட்டும் அதனதன் அளவில் தனித்தனி நூலாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. பொருள் அளவிலும் ஒரு நூலுக்கும் மற்றொரு நூலுக்கும் அதிகம் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. எட்டுத்தொகை இலக்கியத்தைப் போல அகம், புறம் என்ற திணை அடிப்படையில் இப்பத்து நூல்களும் தொகுக்கப்படவில்லை என்பது வெளிப்படை. ஏனெனில் இருதிணைகளைச் சார்ந்த பாடல்களும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

**இலக்கியங்களின் வைப்புமுறை மரபு**

பத்துப்பாட்டில் இடம்பெறும் இலக்கியங்கள் ஆற்றுப்படை, அகம், புறம், அகப்புறம் என்ற பாகுபாட்டில் அமைந்துள்ளன. பத்துப்பாட்டுள்,

- **திருமுருகாற்றுப்படை**
- **பொருநராற்றுப்படை**
- **சிறுபாணாற்றுப்படை**
- **பெரும்பாணாற்றுப்படை**
- **மலைபடுகடாம்**

ஐந்து ஆற்றுப்படை நூல்ககளை காண முடிகிறது. மலைபடுகடாம் நூலினை **'கூத்தராற்றுப்படை'** என்று (தொல்.நூ.இளம்.539,நச்.459) உரையாசிரியர்கள் குறிப்பிடுவர்.

- **மதுரைக் காஞ்சி**

வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சான்றோர் எடுத்துக்கூறும் காஞ்சித் திணையில் அமைந்த புறப்பொருள் சார்ந்த நூல்.

- **முல்லைப்பாட்டு**
- **குறிஞ்சிப்பாட்டு**
- **பட்டினப்பாலை**

ஆகிய மூன்றும் அகப்பொருள் பற்றிய பாடல்களாகும். குறிஞ்சிப்பாட்டைப் பெருங்குறிஞ்சி என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவர்.

- **நெடுநல்வாடை**

அகப்பொருள் செய்தி கொண்டுள்ள போதிலும் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு, முன்னோன் முறைமுறை காட்ட' (176-177) எனப் பாண்டியனது அடையாளப் பூவைக் கூறியதால், இதனைப் புறப்பொருள் சார்புடையது என்பர். வாகைத்திணையுள் அமைந்துள்ள கூதிர்ப்பாசறை என்னும் துறையுள் இதனை நச்சினார்க்கினியர் அடக்குவர். நச்சினார்க்கினியர் தொடங்கி வைத்த, நெடுநல்வாடை அகமா? புறமா? என்ற விவாதம் இன்றைய ஆராய்ச்சியாளர்களின் ஆய்விலும் முதன்மை பெற்றுள்ளது. அகம் (வ.சுப.மாணிக்கம், 2010:337-339), புறம் (த.வசந்தாள், 1990:354) என்ற இருவேறுபட்ட கருத்துகளுக்கும் ஆய்வாளர்கள் சான்று தந்து விளக்கியுள்ளனர்.

திருமுருகாற்றுப்படை தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்துக்கு மாறுபட்டது. தொல்காப்பியர், நிலையற்ற பொருளைப் பெறுவதற்காகக் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகிய நால் வகையினரே ஆற்றுப்படுத்தற்கு உரியவர் என உரைக்க, நக்கீரர் முருகனருளைப்

பெறப் புலவனை ஆற்றுப் படுத்துவதாகப் பாடி ஒரு புதுமை செய்தார். பிற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்பட்டவர்களின் பெயரால், பொருநர் ஆற்றுப்படை என்பது போல வழங்க, நக்கீரர் தம் நூலை, பாட்டுடைத் தலைவனான முருகன் பெயரால் வழங்கியமையும் மற்றோர் புதுமையாகும். எனினும் மரபு முறைப்படி இதனைப் **'புலவராற்றுப்படை'** என வழங்கியதும் உண்டு. நக்கீரர் ஆற்றுப்படை இலக்கணத்தையே மாற்றியமைத்த பிறகு நக்கீரர் முறையினை ஏற்று,

**'இருங்கண் வானத்து இமையோர் உழைப்**
**பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று'**

என்று புறப்பொருள் வெண்பாமாலை விதி வகுத்தது.

**நூற்பதிப்பு மற்றும் உரை வரலாறு**

பத்துப்பாட்டு முழுவதற்கும் நச்சினார்க்கினியர் சிறந்த உரை எழுதியுள்ளார். இந்த உரையுடன் பத்துப்பாட்டை முதன் முதலில் 1889-ல் டாக்டர் உ.வே.சாமிநாதையர் பதிப்பித்தார். மதுரைக் காஞ்சி, குறிஞ்சிப் பாட்டு, மலைபடு கடாம் நீங்கலாக ஏனைய ஏழுக்கும் வை.மு.கோபல கிருஷ்ணமாச்சாரியார் உரை எழுதுதியுள்ளார். 1931-ல் தொடங்கி அவ்வப்போது தனித்தனி நூல்களாக வெளியிட்டார். அவர் உரையெழுதாது விட்ட மூன்றுக்கும் அவர் மாணாக்கரும் தமிழ்க்கடல் எனப்படும் பேராசிரியருமான சி.ஜெகனாதசாரியார் உரை எழுதி வெளியிட்டார்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை மேற்பார்வையில் சைவ சித்தாந்த மகாசமாசம் 1940ஆம் ஆண்டு 'சங்க இலக்கியம்' என்ற தலைப்பில் ஒரு பதிப்பை உருவாகியுள்ளது. பாடிய புலவர்களை அடிப்படையாகக் கொண்டு அகர வரிசைப்படி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் பாக்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பதிப்பினை 1967-ல் பாரி நிலையமும், மூன்றாம் பதிப்பினை 2006-ல் முல்லை நிலையமும் வெளியிட்டுள்ளது.

மர்ரே எஸ். இராஜம் அவர்கள் 1957ஆம் ஆண்டு சங்க இலக்கியத்தை தனித்தனி நூல்களாக வெளியிட்டுள்ளார். மேலும், பாடப்பட்டோர் பெயர் வரிசை, சொல் விளக்கம், தொடர் கதைகளும் வரலாற்றுக் குறிப்புகளும், பழக்க வழக்கங்கள், கட்டுரைத் தொடர்கள், உவமைகள், வருணனைகள் போன்றவற்றைக் குறிப்பிடும் 'பாட்டும் தொகையும்' என்ற சங்க இலக்கியக் கருவி நூல் ஒன்றையும் இத்தொகுப்புடன் வெளியிட்டுள்ளார். இதன் இரண்டாம் பதிப்பை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 1981ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

பழந்தமிழ் இலக்கண இலக்கிய காவிய நூல்களை எல்லாம் உரைகளுடன் ஒருங்கே பெற்றுப் பயன்பெறும் வகையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் 1970ஆம் ஆண்டு 'பழந்தமிழ் இலக்கியப் பேழை' என்ற ஒன்றை வெளியிட்டது. ஏற்கெனவே வெளிவந்த நல்ல பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இப்பேழையைக் கழகம் வெளியிட்டுள்ளது. தொல்காப்பிய உரைகள்

பதினொரு தொகுதிகளாகவும், பத்துப்பாட்டு இரண்டு தொகுதிகளாகவும், எட்டுத்தொகை பதினொரு தொகுதிகளாகவும், பதினெண் கீழ்க்கணக்கு ஏழு தொகுதிகளாகவும், காப்பியங்கள் சிலப்பதிகாரம்), மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமார காவியம், நீலகேசி, யசோதர காவியம் (பதினொரு தொகுதிகளாகவும் இப்பேழை அமைந்திருந்தது.

புலவர் அ. மாணிக்கம் 'பத்துப்பாட்டு' உரையினைச் சென்னை வர்த்தமானன் பதிப்பகம் முதற்பதிப்பாக 1999ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. முனைவர் அ.மா.பரிமணம் மற்றும் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் ஆகியோரைத் தலைமைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 'சங்க இலக்கியம்' பதினான்கு தொகுதிகளாக சென்னை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் முதற்பதிப்பை 2004-லும், இரண்டாம் பதிப்பை 2006-ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பை 2007-லும் வெளியிட்டுள்ளது. இத்தொகுதிகளுள் பத்துப்பாட்டு நூலிற்கு தெளிவான விளக்க உரையினை முனைவர் வி. நாகராசன் அவர்கள் எழுதியுள்ளார்.

பேராசிரியர்கள் முருகசாமி, மீனவன், சுப.அண்ணாமலை, தமிழண்ணல் ஆகியோரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட உரையினைக் காரைக்குடியினைச் சார்ந்த கோவிலூர் மடலாயம் 2004-லும் வெளியிட்டுள்ளது. முனைவர் ச,வே.சுப்பிரமணியம் அவர்கள் 2006ஆம் ஆண்டு மூலம் மட்டும் கொண்ட சங்க இலக்கியத்தை மணிவாசகர் பதிப்பகம் வழி வெளியிட்டுள்ளார். உலகம் முழுதும் உள்ள தமிழர்கள் இணையதளத்தின் மூலம் தமிழிலக்கியங்களைத் தெரிந்துகொள்ள, சென்னையில் இயங்கி வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.tamilvu.org) நூலகம் என்ற பகுதியில் 'சங்க இலக்கியம்' இடம்பெற்றுள்ளது.

**அகம் – புறம்சார் மரபு**

அகம், புறம் என்ற ஓர் அமைப்பினைப் பத்துப்பாட்டு கொண்டுள்ளது. பட்டினப்பாலையில் அகம் குறித்த செய்திகளைவிட புறத்திற்கான சூழ்நிலைகள் அதிகம் இடம்பெற்றிருக்கப் பட்டினப்பாலையை அக இலக்கியமாக அடையாளப்படுத்துவதும் நெடுநல்வாடையில் அகத்திற்கான முக்கியத்துவம் அதிகம் இடம் பெற்றிருக்கப் புற இலக்கியமாக வரையறை செய்வதும் ஆய்வு சார்ந்த கருத்தாடல்கள் உருவாவதற்கான சூழல்களை இவ்விலக்கியங்கள் ஏற்படுத்துகின்றன. இதனைக் கா.சிவத்தம்பி பத்துப்பாட்டினுள் இடம்பெறும் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய பாடல்களில் அகத்திணை, புறத்திணை இயைந்திருக்கும் முறையை காண முடிகிறது என்று கூறியுள்ளார்.

சங்க இலக்கியங்களினுள்ளே கதைப் பாடல்கள் இல்லாத இன்றைய நிலையில், முல்லைப்பாட்டு, நெடுநல்வாடையில் ஏற்படும் இம்மாற்றம் சங்கத்தமிழ்க் கவிதையியலிற் காணப்படும் வளர்ச்சியாகவே கொள்ளப்படல் வேண்டும். 'வேம்புதலையாத்த நோன் காழெஃகம்' எனப் பாண்டியனின் அடையாளப் பூவைக் கூறியதால் அகமாகதாயிற்று எனச் சுட்டி நெடுநல்வாடையைப் புறத்தில் அடக்குகிறார் நச்சினார்க்கினியர். இவ்வாறு நச்சினார்க்கினியர் கொண்டால் அம்மன்கிளி முருகதாஸ் 'சங்க கவிதையாக்கம் மரபும் மாற்றமும்' என்ற நூலில், குறுந்தொகையில் கூட 281-ஆம் பாடலில் வேம்பு

அணிந்த தலைவன் கூறப்படுகின்றான் என்பதை எடுத்துக்காட்டி, அப்பாடலில் வரும் தலைவன் பாண்டியன் எனக் கருதி ஏன் புறத்திற்குள் அடக்கவில்லை என்று கேள்வி எழுப்பி தலைவனின் புறச்செயலையும் தலைவியின் இருத்தலையும் கூறி அமைகின்ற இப்பாடல் அகத்துக்குரியதே. இந்த முறைமாற்றம் தமிழ்க் கவிதையியல் ஏற்பட்ட வளர்ச்சி என்று குறிப்பிடுகிறார்.

**இலக்கிய மரபுகள்**

- **ஆற்றுப்படை இலக்கியம் -** பத்துப்பாட்டில் உள்ள ஐந்து ஆற்றுப்படைப் பாடல்கள், வழிப்படுத்துதல் என்ற இலக்கிய மரபினை மையமாகக் கொண்டுள்ளன.
- **அகமும் புறமும் –** நெடுநல்வாடை, பட்டினப்பாலை போன்ற பாடல்களில் அகமும் புறமும் கலந்த இலக்கிய மரபினைக் காண முடிகிறது.. முல்லைப்பாட்டு போன்ற சில பாடல்கள் அக இலக்கிய மரபில் தனித்துவம் பெற்றுள்ளன.
- **திணை மரபு -** சங்க இலக்கிய மரபையொட்டி, ஒவ்வொரு நூலும் குறிப்பிட்ட திணையை மையமாகக் கொண்டு, அந்தத் திணைக்குரிய மரபுகளையும் இயற்கைப் பொருட்களையும் விளக்குகிறது.

**பண்பாடு மற்றும் சமூகம் சார்ந்த மரபுகள்**

- **வள்ளல்-பாணர் உறவு -** பத்துப்பாடல்களில் வள்ளல்களிடம் பரிசுபெற்றுச் செல்லும் பாணர், கூத்தர், விறலியர் போன்றோர் இடம்பெறுவதோடு, அவர்களின் வறுமை போக்க வள்ளல்களின் கொடைத்திறன் போற்றப்படுகிறது.
- **இயற்கைப் பயன்பாடு -** சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததைக் காட்டும் வகையில், இயற்கைப் பொருட்கள், உணவு முறைகள், விலங்குகள், பறவைகள் ஆகியவை இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- **இறை நம்பிக்கை -** பழந்தமிழ் மக்கள் இயற்கையை மையமாகக் கொண்டு சடங்குகள் செய்ததும், இறை நம்பிக்கை சார்ந்த மரபுகள் குறைவாக இடம்பெற்றிருந்ததும் பத்துப்பாட்டில் இருந்து அறிய முடிகிறது.
- **இனக்குழு மரபு -** பேகன் போன்ற வள்ளல்கள் இயற்கை உயிரினங்களுடன் (மயில்) தொடர்புபடுத்தப்படுவது, குலக்குறி மரபு சார்ந்த பண்பாட்டு அம்சமாகும்.

**கலை மற்றும் இசை மரபுகள்**

- **இசைக்கருவிகள் -** பத்துப்பாடல்களில் யாழ், தண்ணுமை, முழவு, ஆகுளி, பாண்டில் போன்ற பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- **கலைஞர்கள் -** பாணர், விறலியர், கூத்தர் போன்ற கலைஞர்களின் இசை, கூத்து, கலைத்திறன் ஆகியவை பற்றிய செய்திகள் இப்பாடல்களில் காணப்படுகின்றன.

**இலக்கண மரபு**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இரண்டும் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் இயன்றிருந்தாலும் அகம், புறம் என்ற பொருள் நிலையில் ஒன்றுப்பட்டிருந்தாலும் அடிப்படையில் இரண்டிற்கும் வேறுபாடு உள்ளதை இவ்விரு இலக்கியங்களின் தொகுப்பின் வழியாக இரா.தண்டாயுதம், எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் அகவற்பாக்கள் தம்மளவில் முழுமையாய் நின்றாலும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியைப் புலப்படுத்தி நிற்கும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே அவை காணப்படுகின்றன.

பத்துப்பாட்டில் காணப்படும் பாடல்கள், அவை ஒரு தொகுப்பு நூலுக்குள் அடங்கியிருந்தாலும், ஒவ்வொன்றும் தன்னளவில் ஒரு தனி முழுநூலாகவே காணப்படுகின்றது. ஒரு தனி நூலுக்கு இருக்க வேண்டிய பொருளமைதி, தொடக்கம், வளர்ச்சி, முடிவு, முழுமையுணர்ச்சி முதலியவற்றை ஒவ்வொரு நூலிலும் காணமுடியும். எனவே அளவால் நீண்டு, தம்மளவில் முழுமை பெற்ற பத்துப் பாடல்களே பத்துப்பாட்டு என்ற பெயரில் தொகுக்கப் பெற்றுள்ளன என்று விளக்கி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இரண்டு தொகுப்புகளும் அமைப்பு முறையில் வேறுபட்டு உள்ளதை எடுத்துரைக்கிறார்.

பத்துப்பாட்டை நெடும்பாடல்களின் தொடக்கமாகவும் பிற்காலக் காப்பிய இலக்கியத்திற்கு முன் வடிவமாகவும் அறிய முடிகிறது. ஆற்றுப்படைப் பாடல்கள், முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி எனத் தொடங்கும் இந்த நெடும்பாடல் மரபு சிலப்பதிகாரத்தின் வழியாக முழுமைபெறுகிறது. இவ்வகையான பாடல் மரபை நெடும்பாட்டு என்று வகைப்படுத்தலாம். கா.சிவத்தம்பி, **'பத்துப்பாட்டு மரபும் மாற்றமும்'** என்ற கட்டுரையில் பத்துப்பாட்டில் அமைந்துள்ள அகப்புற இணைவு, மரபு மாற்றங்கள் எட்டுத்தொகை பாடல்கள் சிலவற்றிலும் காணமுடியும் எனச் சுட்டிக்காட்டுகிறார்.

கி.பி.14ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியல் பத்துப்பாட்டு நூலின் அமைப்புக் குறித்தும் அது எந்தப் பாவில் இயற்றப்பட வேண்டும் என்பதைக் குறித்தும் இரண்டு நூற்பாக்களில் எடுத்துரைக்கிறது.

> **"நூறடிச் சிறுமை நூற்றப்பத் தளவே**
> **கூறிய அடியின் ஈரைம் பாட்டுத்**
> **தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே"** **ப.பா. நூ.384**

அதுவே

**"அகவலின் வருமென அறைகுநர் புலவர்"** **ப.பா. நூ.385**

இப்பொழுது வழங்கும் பத்துப்பாட்டுத் தொகுப்பின் இயல்பு நோக்கி இயற்றப்பட்ட நிலையிலேயே இந்நூற்பாக்கள் அமைந்துள்ளன. பொதுவாகப் பத்துப்பாட்டை ஆசிரியப்பாவால் இயன்றது என்றே

குறிப்பிடுவர். இந்நூற்பாவாவும் அவ்வாறே ஆசிரியத்தில் வரும் என்ற குறிப்பினைத் தருகிறது. ஆனால் பத்துப்பாட்டில் இரண்டு வஞ்சிப்பாக்கள் இடம்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட நூற்பாக்கள் வடிவத்தை முதன்மைப்படுத்தி ஆசிரியப்பாவால் இயற்றப்பட வேண்டும் என்று கூறுவதையும் பத்துப்பாட்டின் அமைப்பையும் கொண்டு ஆராயும் போது பத்துப்பாட்டுப் பாவகையால் தொகுக்கப்பட்டுள்ளது புலனாகிறது.

சங்க நூல்களின் யாப்பு தனிப்பட்ட பண்பு வாய்ந்தது. அந்நூல்கள் யாவும் ஆசிரியப்பாவிலும் வஞ்சிபாவிலும் அமைந்தவை. சங்க மருவிய காலத்து நூல்கள் பெரும்பாலும் வெண்பாவாலும் பல்லவர் காலத்து நூல்கள் பெரும்பாலும் விருத்தத்தாலும், துறையாலும் தாழிசையாலும் ஆனவை. இவ்வேற்றுமைகள் யாவும் சங்க நூல்களைப் பிற்காலத்து நூல்களிலிருந்து பிரித்து வைக்கின்றன என்று சங்க இலக்கியங்களில் பயிலும் பாவடிவங்களின் தனித்தன்மை குறித்து சு.வித்தியானந்தம் என்று விளங்குவதிலிருந்து சங்க இலக்கியப் பாவடிவங்களின் பழைமையையும் தனித்தன்மையையும் உணரமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் பயிலும் பாக்களின் சிறப்பினை வையாபுரிப்பிள்ளை அவர்கள், பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு, இவ்வகையான பா வடிவங்கள் பிறமொழிகளில் இல்லை என்றும் இவை தமிழ் மொழிக்கே உரிய தனித்த சிறப்பான பாக்களாகத் திகழ்கின்றன என்றும் கூறுகிறார்.

- பத்துப்பாட்டில் எட்டு நூல்கள் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன.
- மதுரைக்காஞ்சியும், பட்டினப்பாலையும் வஞ்சிப்பாவில் அமைந்துள்ளன.

**நேரிசை ஆசிரியப்பா பயின்று வரும் நூல்கள் - 6**

- பெரும்பாணாற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மலைபடுகடாம்
- குறிஞ்சிப்பாட்டு

**வஞ்சியடி விரவிய நேரிசை ஆசிரியப்பா பயின்று வரும் நூல் - 1**

- பொருநராற்றுப்படை

**இணைக்குறள் ஆசிரியப்பா பயின்று வரும் நூல் - 1**

- திருமுருகாற்றுப்படை

**வஞ்சிப்பா பயின்று வரும் நூல் - 2**

- பட்டினப்பாலை,
- மதுரைக்காஞ்சி

என்று பொதுவாகப் பத்துப்பாட்டு யாப்பியலை அடையாளப்படுத்தலாம். பிற்காலக் காப்பியங்கள் ஆசிரியப்பாவில் அமையப் பத்துப்பாட்டின் வடிவ அமைப்பு முறையே காரணம் என்பார் சோ.ந.கந்தசாமி.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற ஆசிரியப்பாவில் அமைந்த காப்பியங்களுக்கு வழிகாட்டியாகப் பத்துப்பாட்டு நூல்களே அமைந்துள்ளதையும் விளக்குகிறார்.

நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை நேரிசை ஆசிரியப்பாவில் அமைந்த நிலையில் திருமுருகாற்றுப்படை மட்டும் இணைக்குறளாசிரியப்பாவில் அமைந்துள்ளது கருதத்தக்கது. திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியமான பத்துப்பாட்டு தொகுப்பிலும், சைவ இலக்கியமான திருமுறை தொகுப்புகளுள் ஒன்றான பதினோராம் திருமுறையில் நக்கீர தேவநாயனார் இயற்றி இடம்பெற்றுள்ள ஆசிரியப்பா பாடல்களில் பெரும்பான்மை இணைக்குறளாசிரியப்பாக்கள் ஆகும். நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை குறித்து இதுவரை மூன்று நிலைகளில் கருத்துகள் வெளிப்பட்டுள்ளன.

- உ.வே.சாமிநாதையர் பத்துப்பாட்டில் பாடினோர் வரலாறு குறிப்பிடுமிடத்தில் அனைத்து இலக்கியங்களையும் ஒரே நக்கீரர் பாடியதாகப் பதிவுசெய்கிறார்.
- எஸ்.வையாபுரிப்பிள்ளை பொருண்மை அடிப்படையில் ஆராய்ந்து எட்டுத் தொகையில் நக்கீரர் இயற்றிய பாடல்களும், நெடுநல்வாடையும் சங்ககால நக்கீரர் இயற்றியன எனவும் பதினோராம் திருமுறையில் உள்ள பாடல்களும் திருமுருகாற்றுப்படையும் நக்கீரதேவ நாயனார் இயற்றின எனவும் விளக்கியுள்ளார்.
- மு.அருணாசலம் திருமுருகாற்றுப்படை மட்டும் சங்ககால நக்கீரர் இயற்றியதாகவும் பதினோராம் திருமுறையில் உள்ள பிற இலக்கியங்கள் நக்கீர தேவநாயனார் இயற்றியதாகவும் எடுத்துரைக்கிறார் .

பத்துப்பாட்டின் அனைத்துப் பாக்களும் ‘ஏ’ என்ற ஈற்றுச்சீரையும், ஈற்றயலடி முச்சீரையும் பெற்று விளங்குகின்றன. பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும் நேரிசை ஆசிரியத்தால் முடிந்த வஞ்சிப்பாக்கள். பிற்கால வழக்கான தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிய வேண்டும் என்ற வஞ்சிப்பாவின் இலக்கணம் தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் தொல்காப்பிய குறிப்பிடும் ‘வஞ்சி தூக்கே செந்தூக் கியற்றே’ என்ற (தொல்.செய்.நூ.68) நூற்பாவின் வழி ஆசிரிய ஈறு போல வஞ்சிப்பாவின் ஈறு அமையும் என்பது பெறப்படுகிறது. புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களில் பயிலும் வஞ்சியமைப்புகளே பிற்கால யாப்பிலக்கண நூல்களுக்குச் சான்றுகளாக அமைந்து தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிய வேண்டும் என்று இலக்கணத்தைப் பெற அடிப்படையாக அமைகிறது.

பத்துப்பாட்டு இலக்கியங்கள் காலத்தால் முற்பட்டது. அகம், புறம், ஆற்றுப்படை மற்றும் அகப்புறமென நால்வகைப் பாகுபாடுகளைக் கொண்டு விளங்குகிறது. எண்ணிலடங்கா வாழ்வியல் கூறுகளை இந்தத் தொகுப்பிலுள்ள இலக்கியங்கள் சுட்டுகின்றன. எனினும் அவற்றைத் தாண்டிய நிலையில் இந்த பத்துப்பாட்டு நூலிற்குள் இருக்கும் மரபு சார்ந்தகூருகளை நாம் அறிய வேண்டியது அவசியம். அந்த வகையில் இந்த ஆய்வுக் கட்டுரையில் வழங்கப்பட்டுள்ள ஆய்வுத் தரவுகள் பத்துப்பாட்டில் இடம்பெறும் அமைப்பு முறை, மரபுக் கூறுகள், இலக்கண மரபுகள் என தகுந்தவற்றை அறிஞர்களின் கருத்துருக்களுடன் விளக்கியிருக்கிறது. எதிர்வரும் தலைமுறைக்கான ஆய்வுத் தடத்தையும் ஆய்விஒயல் கூறுகளையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதை வாசிப்பின் வழி அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, தி பார்க்கர், சென்னை, 2005.
2. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்க இலக்கியக் கவிதையும் கருத்தாக்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 2009.
3. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்) மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, ஏப்ரல் 2010
4. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, மார்ச் 2005
5. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, மே 2005
6. இராசமாணிக்கனார், மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழகம், 1970.
7. கந்தசாமி, சோ. ந., தமிழ் இலக்கணச் செல்வம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2007.
8. கந்தசாமி, சோ. ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம் முதற்பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1989.
9. வரதராசன், மு., காலந்தோறும் தமிழ், பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு 2003.
10. அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.
11. தண்டாயுதம், இரா., சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1978.
12. அரசு, வீ. (கட்டுரையாளர்), தமிழ் இலக்கிய வகைமையும் இலக்கியக் கோட்பாடும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை, சிறப்பு மலர், சூன், 2010.
13. பிச்சை, அ., சங்க இலக்கிய யாப்பியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2011.
14. சிதம்பரநாதனார், அ., தமிழ் யாப்பியல் உயராய்வு (கி.பி. பத்தாம் நூற்றாண்டு, வரை) தமிழ் யாப்பியல் வரலாறு, இராம. குருநாதன் (ப.ஆ.), விழிகள் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.
15. வையாபுரிப்பிள்ளை, எஸ்.,இலக்கியச் சிந்தனைகள், வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், முதல் தொகுதி, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், 1989.
16. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (1961ஆம் ஆண்டு நிழற்படப் பதிப்பு), 1986.
17. மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., பத்துப்பாட்டு ஆய்வு (புறம்), மு.சண்முகம் பிள்ளை (ப.ஆ.), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1981.
18. வசந்தாள், த., தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1991.
19. மறைமலையடிகள், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, டி.எம்.அச்சுக்கூடம், பல்லாவரம், மூன்றாம் பதிப்பு, 1930.
20. தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், வெள்ளை வாரணன் (ப.ஆ), பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, முதற்பதிப்பு, 1989.

21. மாணிக்கம், வ.சுப., தமிழ்க்காதல், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2010.

References:

1. Arunachalam, M. *Tamil Ilakkiya Varalaru: Paththam Nutrandu* [History of Tamil Literature: 10th Century]. The Parker, 2005.
2. Sivathamby, Karthigesu. *Sanga Ilakkiya Kavithaiyum Karuthakkamum* [Sangam Literary Poetry and Concept]. 1st ed., International Institute of Tamil Studies, 2009.
3. Tholkappiyar. *Tholkappiyam (Eluttu-Sol-Porul) Moolamum Uraiyum*. Commentary by Ilampuranar, Sarada Pathippagam, Apr. 2010.
4. Tholkappiyar. *Tholkappiyam Eluttathikaram*. Commentary by Ilampuranar, Sarada Pathippagam, Mar. 2005.
5. Tholkappiyar. *Tholkappiyam Sollathikaram*. Commentary by Ilampuranar, Sarada Pathippagam, May 2005.
6. Rajamanickanar, M. *Paththuppaattu Aaraaichi* [Research on Ten Idylls]. University of Madras, 1970.
7. Kandasamy, S. N. *Tamil Ilakkana Selvam* [The Wealth of Tamil Grammar]. 1st ed., Meiyappan Pathippagam, 2007.
8. Kandasamy, S. N. *Tamil Yappiyalin Thottramum Valarchiyum* [Origin and Development of Tamil Prosody]. Vol. 1, Pt. 1, Tamil University, 1989.
9. Varadarajan, M. *Kaalanthorum Tamil* [Tamil Through the Ages]. Reprint, Paari Nilayam, 2003.
10. Murugadas, Ammankili. *Sanga Kavithaiyaakkam Marabum Mattramum* [Sangam Poetic Creation: Tradition and Change]. Kumaran Puthaka Illam, 2006.
11. Dandayudham, R. *Sanga Ilakkiyam (Paththuppaattu)*. 1st ed., Tamil Puthakalayam, Dec. 1978.
12. Arasu, V. "Tamil Ilakkiya Vagaimaiyum Ilakkiya Kotpadum" [Tamil Literary Genres and Literary Theory]. *World Classical Tamil Conference Special Souvenir*, June 2010.
13. Pitchai, A. *Sanga Ilakkiya Yappiyal* [Sangam Literary Prosody]. 1st ed., New Century Book House, Aug. 2011.
14. Chidambaranathan, A. "Tamil Yappiyal Uyarayu (Up to 10th Century AD)." *Tamil Yappiyal Varalaru*, edited by Rama. Gurunathan, 1st ed., Vizhigal Pathippagam, 2009.
15. Vaiyapuri Pillai, S. "Ilakkiya Chinthanaigal" [Literary Thoughts]. *Vaiyapuri Pillai Noolkalanjiyam*, vol. 1, Vaiyapuri Pillai Memorial Trust, 1989.
16. *Paththuppaattu Moolamum Nachinarkiniyar Uraiyum*. Commentary by Nachinarkiniyar, 1961 reprint, Tamil University, 1986.
17. Meenakshisundaranar, T. P. *Paththuppaattu Aayu (Puram)* [Research on Ten Idylls (Exterior)]. Edited by M. Shanmugham Pillai, Sarvodaya Ilakkiya Pannai, 1981.
18. Vasanthal, T. *Tamililakkiyathil Agapporul Marabugal* [Love Traditions in Tamil Literature]. 1st ed., University of Madras, 1991.
19. Maraimalai Adigal. *Pattinappaalai Aaraaichiyurai* [Critical Commentary on Pattinappaalai]. 3rd ed., T.M. Press, 1930.
20. Tholkappiyar. *Tholkappiyam Seyyuliyal Uraivalam*. Edited by Vellaivaranan, 1st ed., Publication Dept, Madurai Kamaraj University, 1989.
21. Manickam, V. Sp. *Tamil Kadhal* [Tamil Love]. 3rd ed., Sarada Pathippagam, 2010.